**செய்தி வெளியீடு எண் : 1585** **நாள் : 13.09.2022**

**செய்தி வெளியீடு**

பழங்குடியின மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே அவர்களுக்கான சமூக நீதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கையுடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கு உரு கொடுக்கும் வகையில் இன்று (13.09.2022) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் அவர்களின் தலைமையில் பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை வழங்குதல் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாநில கூர்நோக்கு குழுக்களில் நிலுவையிலுள்ள பழங்குடியினர் சாதிச் சான்று மெய்த்தன்மை குறித்த கோப்புகள் காலதாமதமின்றி பரிசீலித்து முடிவெடுக்குமாறும், அத்தகைய நிலுவையில் உள்ள கோப்புகளை ஒழுங்குபடுத்தி விரைந்து முடிக்கவும், இது தொடர்பாக தொடர் ஆய்வு மேற்கொள்ளவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. தென்காசி சு.ஜவஹர்,இ.ஆ.ப., அரசு கூடுதல் செயலாளர் திரு. சு.பழனிசாமி, இ.ஆ.ப., பழங்குடியினர் நல இயக்குநர் திரு. எஸ்.அண்ணாதுரை, ம.தொ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in